REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் | ஆசிரியர்.. அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: ஐப்பசி 28உ சனி (13—11—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 29உ ஞாயிறு (14—11—54) [இதழ் 131

## சிந்து சட்டசபை எதிர்க் கட்சித் தலைவர் கைது

### பத்திரிகை ஒன்றுக்கும் தடை

கராச்சி நவ. 12—

சிந்து சட்ட சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், சிந்து அவாமி மஹேஸ் தலைவருமான ஜி. எம். சையத் என்பவர், பாகிஸ்தான் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், அதைத் தொடர்ந்து, சிந்துவில் வெளியாகும் தினசரிப் பத்திரிகை ஒன்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதென்றும் தெரிய வருகிறது.

# திரு-கொச்சியில் போலீஸ் சர்வாதிகாரம்?

## மறியல் செய்த மரத் தொழிலாளருக்கு தடியடி

### இருவருக்குக் காயம்! மூவர் கைது!

### கம்யூனிஸ்ட், காங்கிரஸ், ம. சோ. கட்சி முக்கூட்டு முயற்சி

திருச்சூர், நவ. 12—

இங்கிருந்து மூன்று கல் தொலைவில் இருக்கும் ஒள்ளூரிலுள்ள மரத் தொழிற்சாலை முன், தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது.

தடியடியால் இருவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டது.

சர்க்கார் உத்தியோகஸ்தர்களை தொழிற்சாலைக்குள் செல்லவிடாமல், மேற்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் தடை செய்ததாகச் சொல்லப்படுகிறது. அதற்காக, தொழிற் சங்கத் தலைவரும், மற்ற இரண்டு தொழிலாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உள்ளூர் பாங்கி ஒன்றுக்கு அம் மரத் தொழிற்சாலை கடன்பட்டிருக்கிறது. அக்கடனை ஈடுசெய்து கொள்ள, அப்பாங்கியின் குமாஸ்தாக்களும், நீதிமன்ற அதிகாரிகளும், அத்தொழிற்சாலையில் உள்ள பொருட்களை அகற்ற முயற்சித்தனர். அவர்களை தொழிற்சாலைக்குள் நுழையவிடாமல், மேற்படி தொழிலாளர்கள் மறியல் செய்து ஆர்ப்பாட்டம் புரிந்ததாக நம்பப்படுகிறது.

இனும் கோரியும், கூலி உயர்வு கேட்டும் பல மரத்தொழிற்சாலைகளில், தொழிலாளர்கள் மறியல் செய்துவருகின்றனர்.

இந்த மறியல், கம்யூனிஸ்ட், காங்கிரஸ், மக்கள் சோஷலிஸ்டு கட்சி ஆகிய எல்லா அரசியல் கட்சிகள் சார்பிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

## பாதுகாப்புத்துறை ஊழியர்களிடையே கொந்தளிப்பு

### குறைகளை ஆராய பஞ்சாயத்து நியமிக்கக் கோரிக்கை

### டிசம்பர் முடிவிற்குள் ஏற்படுத்தத் தவறினால் நேரடி நடவடிக்கை

இந்தியப் பேரரசுக்கு பாதுகாப்பு ஊழியர் மாநாட்டின் இறுதி எச்சரிக்கை

பூனா, நவ. 12—

டிசம்பர் 31-ந் தேதிக்குள் தங்கள் தேவைகளை ஆராய்வதற்காகக் கோரப்பட்ட பஞ்சாயத்தை நியமிக்க இந்தியப் பேரரசு முன் வரவில்லையானால், நேரடி நடவடிக்கையை மேற்கொள்ளுவது என்றும், அதற்கான நாடு முழுதும் பரவியுள்ள பாதுகாப்புத்துறை ஊழியர்களிடை ஒப்புதல் வாக்கெடுப்புக்கு ஏற்பாடு செய்வதெனவும், வேலை நிறுத்த நிதி சேர்க்க முயற்சிப்பதெனவும், இன்று முடிவுற்ற அகில இந்திய பாதுகாப்புத்துறை ஊழியர் முதல் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

பூனாவை அடுத்துள்ள கிர்கீயில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற மேற்படி மாநாட்டில், நேரடி நடவடிக்கைக்கான எல்லா காரியங்களையும் மேற்கொள்ளுமாறு, பாதுகாப்புத்துறை ஊழியர் சங்க செயற்குழுவிற்கு அதிகாரமளிப்பது எனவும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைப்புகளில் பணிபுரியும் ஊழியர்களின் குறைகள் நீண்டநாட்களாக இருந்து வருவதும், நியாயம் நிரம்பியதுமாகும். அவைகளைக் களைய பதில் இந்தியப் பேரரசு துளியும் இரக்கங் காட்டாததற்காக மாநாடு வற்மையாகக் கண்டித்துள்ளது.

மேற்படி ஊழியர்களின் கோரிக்கைகளை சீர்தூக்கிப் பார்த்தே ஒரு முடிவிற்கு வந்திருப்பதாக இந்தியப் பேரரசு கூறுவது பொருத்தமற்றது எனவும், ஏனெனில் பாதுகாப்புத் துறையைப் பொறுத்தவரையில் இந்தியப் பேரரசே ஒரு முதலாளி நிலையில் இருப்பதால், அதன் முடிவு ஒருதலைச் சார்பாகத் தான் இருக்க முடியுமெனவும், ஆதலினால் ஊழியர்கள் கோரிக்கைகளை ஒரு பஞ்சாயத்தின் முடிவிற்கு விடுவதுதான் அரசாங்கத்தின் கடமை எனவும் மற்றொரு தீர்மானம் வலியுறுத்துகிறது.

பஞ்சாயத்தை நியமிக்க மறுத்து அரசாங்கம் மேலும் பிடிவாதமாக இருந்தால், ஏற்கனவே அரசாங்கத்திற்கு பாதுகாப்புஊழியர்களுக்கும் இடையிலிருந்துவரும் அதிருப்தி, மேலும் கூடுதலாவதற்கு இடமுண்டாகும் எனவும், அந்த நிலைமை விரும்பத்தக்கது அல்ல எனவும் தீர்மானம் விளக்கம் தந்திருக்கிறது.

சுப்பிரமணியம் குழு செய்துள்ள சிபார்சுகள் அனைத்தையும் செயலாற்ற அரசாங்கம் முன்வராததுடன், குறிப்பாக 1945 ஆகஸ்டு 1-ந்தேதிமுன் பாதுகாப்பு ஊழியர் செய்த சேவையை கணக்கிட்டுக் கொள்ளவேண்டும் என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்ளாதிருப்பது வருந்தத்தக்கது எனவும் தீர்மானம் குறிப்பிட்டுள்ளது.

பாங்கி ஊழியர்கள் விஷயத்தில், தொழில் நீதி மன்றத் தீர்ப்பில் அமைச்சர் குழு ஒரு முடிவிற்கு வந்துவிட்ட பின்னரும், மேற்படிதகராறை மீண்டும் ஆராய ராஜத்யாக்ஷா குழு நியமித்திருப்பதை, மேற்படி மாநாட்டுத் தீர்மானம், பாதுகாப்பு ஊழியர்களின் கோரிக்கைக்குச் சாதகமாக எடுத்துக் காட்டியுள்ளது.

## பட்டம் ஆட்சி

### காங்கிரசுக்குக் கசக்கிறது!

"திரு—கொ. மாநிலத்தில் பி.-சோ. மந்திரிசபைக்கும், காங்கிரசுக்குமிடையே உள்ள உறவு நிலைகள் தற்போது திருப்தியளிக்கக்கூடிய நிலையில் இல்லை. காங்கிரஸ் கட்சியின் இந்த ஒருமித்தக் கருத்தை, நான், செயற்குழுவுக்கும், மத்திய பார்லிமென்டரி குழுவிற்கும் தெரிவித்திருக்கிறேன்."

"திரு-கொச்சி பி. சோ. கட்சி சர்க்காருக்கும், பிரதேச காங்கிரஸ் கட்சிக்குமிடையேயுள்ள ஒத்துழைப்பு ஒரு குறிப்பிட்ட திசையிலேயே இருந்து வந்திருக்கிறது. முக்கியமான காரியங்களில்கூட, பி.-சோ. கட்சி சர்க்கார், காங்கிரஸ் கட்சியுடன் கலந்தாலோசிப்பது கிடையாது."

இவ்வாறு, திரு—கொச்சி பிரதேசக் காங்கிரஸ் தலைவர் கே. பி. மாதவன் நாயர் தெரிவித்திருக்கிறார்.

## போலீஸ் தடியடி தர்பாரின் எதிரொலி

### இன்ஸ்பெக்டர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

அலட்சியப்படுத்தினால் ம. சோ. கட்சித் தலைவர் உண்ணாது சாகப்போவதாக அச்சுறுத்தல்!

திருச்சூர், நவ. 12—

ஒள்ளூர் மரத் தொழிற்சாலையில் மறியல் செய்த தொழிலாளர்மீது போலீஸ் தடியடி கொடுத்ததின் எதிரொலியாக, அதற்குக் காரணமாக இருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், அப்படி எடுக்கத் தவறினால் சாகும்வரை உண்ணு நோன்பு மேற்கொள்ளப் போவதாகவும் ம. சோ. கட்சித் தலைவரான சி. ஜி. ஜனார்த்தனன் என்பவர் அறிவித்துள்ளார்.

திரு-கொச்சி முதல் மந்திரியான பட்டம் தாணு டெல்லியிலிருப்பதால், அவருக்கு, மேற்படி எச்சரிக்கையை தந்தி மூலம் தெரிவித்திருப்பதாகவும், ம. சோ. க. தலைவர் கிருபளானிக்கும், போலீஸ் தலைமை அதிகாரிக்கும் தகவல் கொடுத்திருப்பதாகவும் அந்தத் தலைவர் கூறியுள்ளார்.

தொழிலாளர்கள் அமைதியாக மறியலில் ஈடுபட்டதாகவும், போலீசார் நடந்துகொண்ட போக்கு அநீதியானது என்றும் அவர் குறிப்பிடுகிறார். சனிக்கிழமை மாலைக்குள் டெல்லியிலுள்ள முதல் மந்திரியிடமிருந்து பதில் தகவல் கிடைக்கவில்லையானால், ஞாயிறு காலையிலிருந்து தாம் சாகும்வரை உண்ணாது இருக்கப் போவதாகவும் அந்தத் தலைவர் அறிவித்துள்ளார்.

போலீஸ் தடியடியை கண்டிக்கும் அறிகுறியாக ஒள்ளூரில் உள்ள மற்ற மரத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் அனைவரும் ஒருநாள் கண்டன வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளவேண்டுமென்று, மரத் தொழிலாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

## இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

### ரூ. 5,500 கோடி மதிப்பில் சென்னையின் பங்கு ரூ. 200 கோடி மட்டுமே!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை சர்க்காரின் முதலீடு ரூ. 200 கோடி இருக்குமென்று நிதியமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இந்த 200 கோடி ரூபாயும் சரியான தொகை இல்லை என்றும், நமது வசதிகள் எவ்வளவு இருக்கின்றன என்பதைப் பொறுத்துத் தான் இத்திட்டம் முடிவு செய்யப்படுமென்றும், என்றாலும், 200-கோடி ரூபாயில் திட்டமிடுவது சாத்தியமென்றே தமக்கு தோன்றுவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

இந்த 200 கோடி ரூபாயில், தனிப்பட்டோரின் முதலீடுகள் ஏதும் சேர்க்கப்படவில்லை என்று தெரிகிறது; தேவையானால், அவர்களும் திட்டங்கள் போட்டு நிறைவேற்றலாம் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## இராதா 'இராமாயண நாடக'த்தை எதிர்த்து மறியல்!

### நாஸ்தீக ஒழிப்பு செயலாளர் கொக்கரிப்பு!

நடிகவேள் எம். ஆர். இராதா நடத்தும் 'இராமாயண நாடகம்' நடைபெறும் இடங்களில் மறியல் செய்யப்போவதாக மதுரை தமிழ் நாடு நாஸ்திக ஒழிப்பு மாநாட்டுப் பொதுச் செயலாளர் என்ற முறையில், ஏ. வி. கிருஷ்ணகுமார் என்னும் தோழர் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

## குறுக்கெழுத்து போட்டி

### கட்டுப்படுத்தப்படும்?

சென்னை, நவ. 12—

குறுக்கெழுத்துப் போட்டிகளைக் கட்டுப்படுத்த அகில இந்திய ரீதியில், சட்டம் ஏற்படுத்தப்பட்டு அடுத்த மக்கள் சபைக் கூட்டத்திலேயே அதற்கான மசோதா ஒன்று கொண்டுவரப்படலாமென்று நிதியமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்..அண்ணதுரை

சென்னை 13—11—1954 சனி

# டெல்லிநாதன் - திருவிளையாடல்!

பதவி வெறி கொண்டலேயும் தலைசிறந்த காங்கிரஸ் தலைவர்களுக்கெல்லாம் தலைசிறந்த வழி காட்டிகளாக, சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரும், ஆந்திர கேசரி பிரகாசம் பந்துலுகாரும் இருந்து வருகிறார்கள். அந்த வெறியில் அணுவளவும் குறைந்து காணப்படுபவரல்ல திரு—கொச்சி முதலமைச்சர் பட்டம் தாணுப் பிள்ளை. பதவியும், பதவியில்லையானாலும் அதனால் கிடைக்கும் செல்வாக்கும் எந்தக் கட்சியின் மூலம் கிடைப்பதாக இருந்தாலும், அந்தக் கட்சியில், மேற்குறிப்பிட்ட மூவரும், தங்கு தடையின்றி இரண்டறக் கலந்துவிடுவர். நாம் கொண்டுள்ள இக்கருத்தை மெய்ப்பிக்க, மூவரின் சென்ற கால அரசியல் நடவடிக்கைகளை ஒரு முறை நோக்குவதே போதுமானதாகும்.

அவர்களுடைய அரசியல் நாடகத்தை நம் போன்றவர்கள், பதவி வேட்டை எனக் கூறுகிறோம்; உண்மைதான் என, அக்கருத்தை அறிஞர்களும் ஒப்புவர்; சாதாரண மக்களும் ‘ஆம்’ என்பர்.

ஆனல், அவர்களைக் கேட்டாலோ, தங்களுடைய பதவி வேட்டைக்குப் புதுப் புது தத்துவார்த்தங்கள் கூறக் கிளம்பி விடுவர். அவர்கள் பதவி `வெறி கண்டு பழிச்சொல் வீசப்படும்பொழுது, பின் குறிப்பிட்ட இருவரும் வாய்மூடி இருந்தாலும் இருந்து விடுவர்; ஆனல், ஆச்சாரியாரோ, தம்முடைய பதவி வெறியை மறைக்க, வியாசர் விருந்து முதல் கோபாலகிருஷ்ண அய்யர் நந்தனர் கீர்த்தனை வரை காணப்படும், தமக்குச் சாதகமாக இருக்கும் ஆதாரங்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல், அடுக்கடுக்காக அடுக்கிக் காட்டுவார். தனது பதவி வெறியை, ‘நிஷ்காமிய கர்மம்’ என்பார்—கண்ணன் காட்டிய வழி என்பார்—‘பற்றற்ற மக்கள் பணி’ புரிவதாகப் பறைசாற்றுவார். அந்த அளவு, பகலை இரவெனக் கூறும் வைரமேறிய நெஞ்சழுத்தம் வாய்ந்தவர் ஆச்சாரியார். நிற்க,

திரு—கொச்சி முதலமைச்சரான பட்டம் தாணுப் பிள்ளை, அங்கு ஏற்கனவே உருவாக்கப்பட்ட முதல் காங்கிரஸ் அமைச்சர் குழுவில் முதன் மந்திரியாக இருந்தார். ஏழே திங்களில் அவருடைய பதவியைப் பறித்துக் கொண்டு, அவரையும் விரட்டிவிட்டனர் அங்குள்ள காங்கிரஸ் கட்சியினர். பதவி பிடுங்கப்பட்டுவிட்டதும், காங்கிரஸ் கட்சியும் எட்டியாகிவிட்டது பட்டத்திற்கு. மக்கள் சோஷலிஸ்டு கட்சியில் குடியேறினர். குடிபுகுந்த கட்சியின் துணை கொண்டு மீண்டும் இழந்த பதவியைப் பெற்றுவிடலாம் என்ற எண்ணத்தில் தான் பட்டம் அந்தக் கட்சிக்குப் போனர். அக்கள்ளக் கருத்தைத் தம் நெஞ்சுக்குள்ளாகவே மறைத்து வைத்துக் கொள்ளாமல், மிகமிக அல்லல் பட்டு, அமைச்சர் குழு அமைக்கும் ஒரு வாய்ப்பை ம. சோ. கட்சிக்கு உண்டாக்கி, தாமும் முதல் மந்திரி பதவி பெறுவதில் வெற்றி கண்டார் பட்டம் தாணு அவர்கள்.

பட்டம் தாணுவின் பதவி வேட்டை, அவருக்குக் களங்கத்தை உண்டாக்குவதோடு மட்டும் நின்றுவிடுவதாக இல்லை. அவர் போக்கு, அவர் சேர்ந்துள்ள கட்சியின் எதிர்காலத்தையேகுட்டிச்சுவராக்கி விடுமோ என்ற ஒரு அச்சத்தையே உண்டாக்கிவிட்டிருக்கிறது.

திரு-கொச்சி தமிழர்கள் சென்னை தாய் தமிழகத்துடன் சேர விழைவது, பட்டம் தாணுவிற்குப் பிடிக்கவில்லை. அவர்களை அச்சுறுத்தி, அவர்களுடைய உரிமை வேட்கையைக் கொன்று விடலாம் என முடிவுக்கு வந்து, பட்டம், தமிழர் கூட்டத்தின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். அவர் முடிவுப்படி, அவருடைய அடக்குமுறையால், தமிழர் உரிமை ஆர்வம் ஒருநாளும் குன்றிவிடப் போவது கிடையாது. அதற்கு மாருக, முன்னிலும் உரம் பெற்று வளரவே செய்யும். இந்த வரலாற்று உண்மை அவருக்கும் தெரியும். இருந்தாலும், காங்கிரஸ் கட்சியின் ‘சபாஷு’ம், ஆதரவும் பெற, பட்டம்,உரிமை கோரிய தமிழர்களைச் சுட்டுக் கொல்ல வேண்டியது கட்டாயமாயிற்று. திரு-கொ. தமிர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய பட்டம் தாணு தயக்கம் காட்டி இருப்பாரானல், அவர் பதவியும் இதற்குள்ளாகப் பறிக்கப்பட்டிருக்கும் திரு-கொச்சி காங்கிரஸ் கட்சியால். பதவி மோகம் தலைக்கேறியுள்ள பட்டம், பட்டம் பறிபோவதை எப்படி தாங்கிக்கொள்ள சம்மதிப்பார்? எனவே, காங்கிரஸ் ஆதரவிற்காகவும், பதவியைக் காப்பாற்றிக்கொள்வதற்காகவும் பட்டம் தமிழர்கள் விஷயத்தில் பதட்டமாக நடந்துகொண்டதில் ஆச்சரியமொன்றுமில்லை.

திரு-கொச்சி ஆட்சியில் பட்டத்திற்குப் பதிலாக, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பனம்பள்ளி கோவிந்த மேனன் இருந்த போதிலும், திரு-கொச்சி தமிழர்களின் உரிமைக் கிளர்ச்சிக்கு, அவரும், துப்பாக்கியால்தான் பதில் கூறி இருப்பார்.

மக்களைத் துப்பாக்கிக் கொண்டு சுட்டு ஒடுக்குவது, அதிகாரத்திலுள்ளவர்களுக்குள்ள இலட்சணங்களில் ஒன்று என்றபோதிலும், திரு-கொச்சி தமிழர் கோரிக்கையைக் குலைக்க வேண்டுமென்ற காங்கிரஸ் மேலிடத்து உத்தரவு இருக்கும்பொழுது, அக் கட்டளையை மீறி நடக்க பனம்பள்ளி முன்வருவாரா? அப்படித்தான் அவர் முன்வந்தால், அடுத்த ஒரு விநாடியாவது அவர் பதவியில் ஒட்டிக் கொண்டு இருக்க முடியுமா?

திரு-கொச்சி தமிழர் உரிமைக் குரல் உரத்துக் கேட்ட பொழுது, ‘திரு-கொச்சி தமிழர்கள் சென்னை தாய்த் தமிழகத்துடன் இணைய விரும்பினல் அதை நான் தடுக்கமாட்டேன்; அதற்கான உரிமை அவர்களுக்கு உண்டு’ என்று பட்டம் தாணு அவர்கள் வாய்ப்பறை அறைந்தார். ஆனல், அவருடைய அமைச்சர் குழுவில் ஒருவரான கனம் குஞ்சு ‘திரு-கொச்சி தமிழ்ப் பகுதிகளை ஒருக்காலும் விடமாட்டோம்’ என வீறுப்புப் பேசி இருக்கிறர்.

ஒரு அமைச்சர் குழுவைச் சேர்ந்தவர்கள்தான் இருவரும். அமைச்சர்கள் இருவரும் ஒரே கட்சியைச் சேர்ந்திருப்பவர்களுமாவர். முதல் அமைச்சர், தங்கள் விருப்பம்போல் நடந்து கொள்ள தி—கொ. தமிழர்களுக்கு உரிமை உண்டு என்கிறர். அவர்களுக்கு அந்த உரிமை அறவே கிடையாது என, ஒரே அமைச்சர் குழுவில் உள்ள குட்டி அமைச்சர் குளறுகிறர். முதல்தரமான முரண்பாடு! அமைச்சர் குழுவின் கூட்டுப் பொறுப்பின் லட்சணமே லட்சணம்!

இந்த முரண்பாடு காங்கிரஸ் கட்சியிலும் உண்டு. அங்கிருந்து மக்கள் சோஷலிஸ்டு கட்சிக்குப் பரவிய தொத்து நோய்தான் இது.

‘சுய நிர்ணய உரிமை திரு-கொச்சி தமிழர்களுக்கு உண்டு’ என்று எர்ணகுளத்திலும், ஆல்வாயிலும் ஏற்கனவே கூடிய கூட்டங்களில் திரு-கொச்சி காங்கிரஸ் குழு தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. ஆனல், அந்தத் தீர்மானத்திற்கு எதிராக திரு-கொச்சி காங்கிரஸ், திரு-கொச்சி தமிழ்ப் பகுதிகளை விடமுடியாது என, மாநில திருத்தக் குழுவிடம் பிடிவாதம் பேசி இருக்கிறது. ஏன் இந்த முரண்பாடு?

இங்குதான் உள்ளது சூட்சுமம்! யார் ஒருவர் ஆடுவித்தால் ஆடாதாரே — பாடுவித்தால் பாடாதாரே? இவை அனைத்தும் டெல்லிநாதன் திருவிளையாடல்!

எய்தவன் இருக்க அம்பை நோவதில் பயன் ஏது? திரு—கொச்சி தமிழர்கள் பனம்பள்ளியைப் பகைத்துக் கொள்ளுவதைக் காட்டிலும், பட்டத்தை வெறுத்துக் கொள்ளுவதைக் காட்டிலும், டெல்லிநாதனைப் புரிந்து கொள்ள வேண்டும் — தெரிந்துகொள்ள வேண்டும். அந்த ஒன்றில்தான் திரு-கொச்சி தமிழர்களுக்கு விமோசனம் உள்ளது.

## ‘புரட்சி தினம்’

### பர்மாவில் 16 பேர் கைது

‘அக்டோபர் புரட்சி தின’த்தையொட்டி நடைபெற்ற ஊர்வலம் ஒன்றில், மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரது படங்களை எடுத்துச் சென்றதற்காக பர்மா தொழிலாளர், விவசாயிகள் கட்சியைச் சேர்ந்த 16 பேர்களை ரங்கூன் போலீசார் கைது செய்துள்ளனர் என்று தெரிகிறது.

கடந்த மாதத்தில்தான் பர்மா மக்கள் சபையில், வெளிநாட்டுத் தலைவர்கள், சின்னங்கள் இவைகளைப் பொது இடங்களில் காட்சிக்கு வைக்கக்கூடாது என்ற சட்டம் நிறைவேறியதாம்.

# ‘பற்ருக்குறை வரவு-செலவுத் திட்டம் பொதுவுடைமைக் கருத்துக்கு உரமூட்டும்’

## இந்திய சர்க்கார் பொருளாதாரக் கொள்கையின் பயங்கரம்

## சுதந்திரத்திற்குப் பின் முன்னேற்றம் ஏற்படவில்லையென்று டாக்டர் ஷெனய் குற்றச்சாட்டு

**“பற்ருக்குறை வரவு—செலவுத் திட்டங்களைத் தயாரிக்கும் நிறைவு பெருத பொருளாதாரக் கொள்கை, கம்யூனிசத்தின் வளர்ச்சிக்கு அளிக்கப்படும் உணவு போன்றதாகும்; இந்திய சர்க்கார் கடைப்பிடிக்கும் பொருளாதாரக் கொள்கை இவ்வகைப்பட்டதே; அதன் விளைவாக, நாட்டில், விரும்பத்தகாத பல நிகழ்ச்சிகள் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றன,”**

என்று, அகமதாபாத் குஜராத் பல்கலைக் கழக சமூகத்துறைத் தலைவர் டாக்டர் பி. ஆர். ஷெனய் கூறியுள்ளார்.

இவர், இந்திய ரிசர்வ் பாங்கியின் முன்னாள் அதிகாரியாவார். அவர் மேலும் கூறுவதாவது:—

“ஐந்தாண்டுத் திட்டத்தை அமுல் நடத்துவதற்காக இந்திய சர்க்கார் கடைபிடிக்கும் பற்ருக்குறை பொருளாதாரக் கொள்கை, கம்யூனிசத்திற்கு நல்ல வளர்ச்சியைத் தரும் நிலையில் உள்ளது; இக்கொள்கை, ஆரம்பப் பொருள்களுக்கான தொழில்களில், தவிர்க்க முடியாத அழிவை ஏற்படுத்திவிட்டது.

தேசியச் செல்வத்தை, தங்கத்தில் முடக்கவும், நகரத்தில் உள்ள சொத்துக்களில் முடக்கவும் திருப்பிவிட்டு விட்டது.

இதனல் ஏற்பட்ட மூன்ருவது விளைவு, குறிப்பிட்ட வருமானமுள்ள குடிமக்களிடையே பொருளாதாரச் சுமையை ஏற்றியிருப்பதுதான்!

**இறுதியாக, சர்க்காரின் பொருளாதாரக் கொள்கையினல் சமூக ஒழுக்கத்தில் தரக் குறைவு ஏற்பட்டுவிட்டது.**

சுதந்திரம் வந்த பிறகு இந்தியாவில் சில குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

வியாபாரம், பொருள்கள் உற்பத்தி, நிலுவைகளைத் தீர்க்கும் தன்மை, நாட்டிலே வேலைகள் கிடைக்கும் நிலை இவைகளின் படி கணக்கிட்டால், முன்னேற்றம் ஏதும் கிட்டவில்லை.

பெல்ஜியம், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, கனடா, தாய்லாந்து போன்ற நாடுகள், பொருளாதாரத்தில் கடின கொள்கையைப் பின்பற்றி, இந்தியா தனது நிறைவில்லா பொருளாதாரக் கொள்கையினல் அமைந்துள்ள முன்னேற்றத்தைவிட, எவ்வளவோ அதிகமான பயனை அடைந்துள்ளன.

சிவில் சர்வீசுகளிடம் வைக்க வேண்டிய கருத்தை, சர்க்கார், உலக மார்க்கெட்டின்மீது வைத்து ஆவன செய்வது நலம் பயக்கும்.

**சரியான முறையில், நடைமுறைக்கு ஏற்றதாக ரூபாயின் மதிப்பு இல்லாததால், இந்தியாவின் வெளிநாட்டு வாணிபம் போருக்குப் பிற்காலத்தில் குறைந்து போயிற்று. இங்கே, பணப் புழக்கம், உலகப் போருக்கு முன்பு இருந்ததைவிட ஆறு மடங்கு அதிகரித்திருக்கிறது. ஆனல் பிரிட்டனில் மூன்று மடங்குதான் உயர்ந்துள்ளது.**

பிரிட்டனில், ஏற்றுமதிகள் 50 சதவீதம் உயர்ந்தும், இறக்குமதி 10 சதவீதம் குறைந்தும் இருக்கிறது.

இந்தியாவில், உலகப் போருக்கு முன்பு இருந்த நிலையில், இப்போது 75 சதவீதம் இறக்குமதி உள்ளது; ஏற்றுமதியோ, போருக்கு முற்காலத்தில் இருந்ததைவிட குறைவாக இருக்கிறது.

**ஐந்தாண்டுத் திட்டத்தினல் ஏற்பட்ட அதிகச் செலவாலும், 1954—55-ன் ஈடுகட்டப்படாத பொருளாதாரத்தினலும், நாட்டின் சரித்திரத்திலேயே காணப்படாத அளவு ரூ. 293 கோடி துண்டு விழுகிறது.**

இந்த மாறுதல் மிகவும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

**வரவு—செலவுத் திட்டத்தில் துண்டு விழும் அளவிற்கு உள்ள பொருளாதாரக் கொள்கை, நாட்டிலே பணவீக்கத்தை அதிகரித்து விட்டது; இந்த நிலை, அபிவிருத்தித் திட்டங்களிடையே முறிவுகள் ஏற்படுமாறு செய்து, சமூக அநீதியை வளர்த்து விட்டது.**

**இதுபோன்ற பொருளாதாரக் கொள்கையைப் போன்று வேறு எதன்மூலமும், கம்யூனிசத்திற்கு உணவூட்ட முடியாது; ஏனென்ருல், குறிப்பிட்ட வருவாயுடைய மக்களைக் கொண்ட நமது தற்கால சமுதாய அமைப்பு, மத்திய சர்க்காரின் பொருளாதாரக் கொள்கையினல் பெரிதும் பாதிக்கப்படுகிறது.”**

## ‘பறக்கும் தட்டு’-

### பத்திரிகை நிருபர் கைது

வாரெசே (வடக்கு இத்தாலி)— ‘சறக்கும் தட்டு’ ஒன்றிலிருந்து ‘செவ்வாய் மண்டலத்தவர்கள்’ சிலர், டிரடெட் எனும் இடத்தில் இறங்கியதாக பரபரப்பையூட்டும் வகையில் பொய்யான செய்தி ஒன்றை வேண்டுமென்றே பரப்பியதாக பத்திரிகை நிருபர் ஒருவரையும், சில இளைஞர்களையும் இத்தாலியப் போலீசார் கைது செய்துள்ளனர்.

வெள்ளி போன்று ஒளி பொருந்திய ‘பறக்கும் தட்டு’ என்று கூறப்பட்டது ஒரு பெரிய துணி என்றும், ‘செவ்வாய் மண்டலத்தவர்’ என்று கூறப்பட்டவர்கள், மாறுவேடத்திலிருந்த இரண்டு சிறுவர்கள் என்றும், இந்த வேடிக்கை, வேண்டுமென்றே மக்களை ஏய்ப்பதற்காகத் திட்டமிட்டு செய்யப்பட்டதென்றும் போலீசார் கூறுகின்றனர்.

இதை நேரில்பார்த்த ஒரு பத்திரிகை நிருபர், இந்த வேடிக்கை பற்றி, விரிவானதொரு கதைகட்டி பத்திரிகை ஒன்றிற்கு அனுப்பிவிட்டாராம். அந்தச் செய்தியை அப் பத்திரிகை முன் பக்கத்தில் பிரசுரித்திருந்ததாம்.

## சம்பளம் உயருகிறது!

### 15,000 பேர் பெறுவர்

மத்திய சர்க்காரின் நிர்வாகத்திற்குட்பட்ட காரியாலயங்களில் வேலை செய்து வரும் மூன்ருந்தர குமாஸ்தாக்களின் அடிப்படை சம்பளத்தை உயர்த்த மத்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்திய சர்க்கார் காரியாலயங்கள், (செக்ரடேரியட்) அது சம்பந்தப்பட்ட மற்றக் காரியாலயங்கள் ஆகிய மத்திய சர்க்கார் காரியாலயங்களில் ஊழியம் செய்துவரும் சுமார் 15 ஆயிரம் குமாஸ்தாக்களுக்கு, இந்த உயர்ந்த அடிப்படைச் சம்பளம் தரப்படுமென்று தெரிகிறது.

# ஆமை வேகத்தில் நடைபெறும் சமுதாய நலத் திட்டங்கள்

## பொருள் விரயமாகிறது; போதுமான உணர்ச்சியில்லை!

## தாங்கள் வகுத்த திட்டம் பற்றி 'அவர்களே' கூறும் அத்தாட்சி!

சமுதாய நலத் திட்டங்கள் சரிவர நிறைவேறவில்லை என்றும், அதை அமுல் செய்வோரிடையே அலட்சியம் காணப்படுகிறது என்றும், திட்டக் கமிஷனின் மதிப்பீடு குழு, அறிக்கை தந்திருக்கிறது.

இந்திய திட்டக் கமிஷனின் திட்ட ஆய்வு மதிப்பீடு பிரிவு, தேசீய அபிவிருத்திக் கவுன்சிலுக்கு வைத்துள்ள அறிக்கையில், "இந்தியாவில் சர்க்காரால் அமுல் செய்யப்படும் சமுதாய நலத் திட்டங்களின் வேலை, ஆமை வேகத்தில் நடைபெறுகிறது," என்று குறிப்பிட்டுள்ளது.

"வேலை நடைபெறுவது மிகவும் தாமதமாகிறது என்ற கருத்து, ஏதோ ஒன்று, அல்லது இரண்டு திட்டங்களுக்கு மட்டும் பொருந்தும் என்று கூற முடியாது; எல்லாத் திட்டங்களிலும் இதே நிலைதான்,"

என்று அந்த அறிக்கை வற்புறுத்திக் கூறியுள்ளது.

அது மேலும் கூறுவதாவது:—

"மார்ச் திங்களுடன் முடிவடையும் ஆறுமாத காலத்தில், திட்டங்கள் நடைபெறும் 17 நிலயங்களில், சுமார் 55 இலட்சம் ரூபாய்கள் செலவிடப்பட்டன; சென்ற ஆண்டில் ரூ. 33 இலட்சம் தான் செலவிடப்பட்டது; ஆனால், நான்கு ஆண்டுகளில், இத்திட்டங்களில் செலவிடவேண்டிய பணத்தைப் பார்க்கும்போது, இப்போது செலவிடப்படும் தொகை மிகவும் குறைவாகும்.

திட்டங்களுக்குப் போதுமான பணியாளர்கள் கிடைத்த பின்னரும், வேலை தாமதமாகவே நடைபெறுகிறது. இந்த நிலை நீடிக்குமென்ருல் சமுதாய நலத் திட்டத்தின் செலவு பற்றிய புனர் பரிசீலனை நடைபெறுவது அவசியமாகும்.

சமுதாய நலத் திட்டங்களுக்கு நியமிக்கப்பட்ட ஆலோசனை குழுக்கள் பயனற்றவையாகும்; மாதக்கணக்கில், குழுவினர் கூடிப் பேசுவது கிடையாது; கூடிப் பேசும் போது, உறுப்பினர்களிடையே அலட்சிய மனப்பான்மையும், விருப்பமில்லாத நிலையும் காணப்படுகிறது. சில நேரங்களில், ஆலோசனைக் குழுவில் நிலவும் சுயநலத் தன்மை கொண்ட சச்சரவுகள், திட்டத்திற்கு உதவுவதைவிட தீமையையே விளைவிக்கின்றன.

விவசாயிகள் விரும்பிக் கேட்கும்போது, தர உயர்வுள்ள விதைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படுவது கிடையாது; சில நேரங்களில் விதைகளின் விலைகள் உயர்ந்து காணப்படுகிறது.

தரிசு நிலங்களைத் திருத்தி பயிரிடும் நிலங்களாக்கும் திட்டம் பெப்சு போன்ற பிரதேசம் தவிர வேறு எந்தப் பிரதேசத்திலும் நடைபெறவில்லை.'

சர்க்காரின் ஆரம்பப் பாடசாலைகள் பலவற்றை ஆதாரப்பள்ளிகளாக மாற்றுவதில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது; என்ருலும், ஆசிரியர்களின் நிலைபற்றி அந்த அறிக்கை மிகவும் வருத்தப்பட்டுள்ளது.

"கிராமத்தில் உள்ள ஆரம்ப ஆசிரியர், அதிகமான அளவில் வேலை வாங்கப்படுகிருர்; அவர், முதியோர் கல்விப் பள்ளி நடத்துகிருர்; அதே நேரத்தில், ஆரம்பப் பள்ளியும் நடத்துகிருர்; பல ஊர்களில் அவர், கிராமத்துப் போஸ்ட்-மாஸ்டராகப் பணியாற்றுகிருர்; கிராமப் பஞ்சாயத்திற்குச் செயலாளராக இருக்கிருர்,"

என்று அக்குழுவினரின் அறிக்கை மேலும் கூறுகிறது.

## அகதிகளுக்கு சலுகை

சென்னை சர்க்காரின் பத்திரிகை குறிப்பொன்று, சென்னையில் நியாயக் கடைகள் வைத்துள்ள பாகிஸ்தான் அகதிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள சலுகையை 1955 மார்ச் 31 வரை நீடித்திருப்பதாக தெரிவித்திருக்கிறது.

# இசை பயின்ற அமெரிக்க மாணவர்

### செக். நாட்டில் தஞ்சம்

ஹெர்பர்ட் வார்டு என்ற 33 வயதுடைய இசை பயிலும் அமெரிக்க மாணவர் ஒருவர், தனது மனைவி, குழந்தைகளுடன் வியன்னுவிலிருந்து ஓடிச்சென்று செக்கோஸ்லாவேக்கியா நாட்டில் தஞ்சம் புகுந்துள்ளார் என செய்தி வெளியாகியுள்ளது.

பத்திரிகையாளரிடம் பேசுகையில் ஹெர்பர்ட் வார்டு, 'அமெரிக்காவில் கலைஞர்களின்நிலை மகிழ்ச்சிகரமானதாக இல்லை' என்றும், தன்னை அமெரிக்க அதிகாரிகளும், போலீசாரும் மிகக் கொடுமைப் படுத்தியதாயும் கூறினுர்.

# முன்னுள் முடிவு திரு-கோ. தமிழர் 'சுய நிர்ணய உரிமை'யை ஒப்புகிறது?

## இந்நாள் காங்கிரஸ் முடிவு முரண்பட்டிருப்பது விந்தையே!

"திருவிதாங்கூரில் காங்கிரஸ் கட்சிக்கு வேண்டிய அளவு ஆதரவு தேடுவதை, விட்டுவிட்டு, ஏற்கனவே எரிந்துகொண்டிருக்கும் நெருப்பில், மேலும் எண்ணெய் ஊற்றுவது போன்றுள்ள ஒரு தீர்மானத்தை தி.—கொ. பிரதேசக் காங்கிரஸ் குழு மேற்கொள்ளுவதாயிருந்தால், தென் திருவிதாங்கூரில் உள்ள காங்கிரஸ் கட்சிக்கு, அவர்கள் மேலும் சாவு மணி அடிப்பதைப் போன்றதேயாகும்,"

என்று, திரு—கொச்சி சர்க்காரின் கேரள மாநில அமைப்புப் பற்றிய பிரதேசக் காங்கிரஸ் குழுவின் குறிப்பொன்றைப் பற்றி, திரு—தமிழகக் காங்கிரசைச் சேர்ந்த பி. பால்ரெத்தினம் குறிப்பிட்டிருக்கிருர்.

அவர் மேலும் கூறியதாவது:—

"சென்ற சில நாட்களுக்கு முன் எர்ணுகுளத்தில் நடைபெற்ற திரு—கொச்சி பிரதேசக் காங்கிரஸ் குழுவின் தீர்மானங்களும், அக்குழு, எல்லை நிர்ணய குழுவுக்குச் சமர்ப்பித்துள்ள மகஜரும் உண்மையிலேயே திரு—கொச்சி தமிழகக் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு வியப்பையூட்டுவனவாகவே இருக்கின்றன.

"சில ஆண்டுகளுக்கு முன் எர்ணுகுளத்திலும், ஆல்வாயிலும் கூடிய தி—கோ. உட்பட்ட கேரள பிரதேச காங்கிரஸ் குழு, இவ்விஷயம் பற்றி விவாதத்திற்கெடுத்துக் கொண்ட போது, 'திருவிதாங்கூரில், தமிழர்கள் பெரும்பான்மையினராக வதியும் பிரதேசங்கள் சம்மந்தப்பட்டவரையில், எல்லை நிர்ணயக் குழு ஒன்று உருவாகும் போது, அந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்குச் சுய நிர்ணய உரிமை நிச்சயமாக இருக்கும்' என்ற தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம் அமுலில் இருந்து வர, எல்லை நிர்ணயக் குழு உருவானதும், திரு—கொச்சி பிரதேசக் காங்கிரஸ் குழு இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை மேற்கொண்டது வியப்புக்குரிய ஒன்றேயாகும்."

# பிரான்சில் மது குறைப்புத் திட்டம் அமுலாகும்

## பிரெஞ்சுப் பிரதமரின் அடுத்த முயற்சி

பிரெஞ்சுப் பிரதமர் மெண்டே பிரான்ஸ், தனது அடுத்த முயற்சியில், பிரான்ஸ் முழுமையும் மதுக் குறைப்புத் திட்டமொன்றை அமுல் செய்வார் என்று தெரிகிறது.

சாராயம் போன்ற மதுவகைகளைக் கட்டுப்படுத்த அவர் திட்டமிட்டிருக்கிருர் என்று கூறப்படுகிறது.

இப்போது தனக்குள்ள பொருளாதாரத் திட்டத்திற்கான அவசர அதிகாரத்தின் மூலம், அடுத்த ஆண்டில் பிரான்சில் உற்பத்தியாகும் பீட் கிழங்கில் மூன்றில் ஒரு பாகத்தைத்தான் சாராயம் காய்ச்ச பயன்படுத்தப்பட வேண்டுமென்று மெண்டே பிரான்ஸ் உத்தரவிட்டிருக்கிருர்.

மது உற்பத்தியாளரையும், மது உபயோகிக்கும் தனிப்பட்ட மனிதரையும் பாதிக்குமாறு அவர் திட்டமிட முயற்சிக்கிருர் என்று கூறப்படுகிறது.

மதுக் குறைப்புக்காக, மெண்டே பிரான்ஸ், பின்வரும் திட்டங்களை ஆலோசிக்கிருர் என்று தெரிகிறது:—

போர்க் காலத்தில் இருந்தது போல். 'குடியில்லா நாட்கள்' மீண்டும் ஏற்படுத்தப்படும். அந்த நாட்களில், ஓட்டல்களிலும், ஒயின் கடைகளிலும், சாராயம் போன்ற மதுவகைகள் கொண்டுவரப்படமாட்டாது.

மதுக் கடைகளைத் திறக்கும் நேரமும், அவைகளை மூடும் நேரமும் கடுமையாக அமுல் நடத்தப்படும். இப்போது விடியற்காலை முதல் இரவு 12 மணி வரை, விற்பனையைப் பொறுத்து கடைகள் திறக்கப்படுகின்றன.

மது வகைக்கான லைசென்சுகளுக்கும், மது வகைகளுக்கும் அதிக வரி விதிக்கப்படும்.

மதுவின்மீது பிரான்ஸ் விதித்துள்ள வரி இப்போதே உலகில் மிகவும் உயர்ந்த அளவுடையதாக இருக்கிறது.

குடித்துவிட்டுக் கலகம்செய்வோருக்கு தண்டனை அளிப்பது கடுமையாக்கப்படும்.

இப்போது மதுக் கடைகளில் 'குடித்துவிட்டுக் கலகம் விளைவித்தால், போலீசாரைத்தாக்கினுல், 5 பிராங்குகள் அபராதம் விதிக்கப்படும்,' என்று அச்சிடப்பட்ட காகிதம் ஒன்று ஒட்டப்பட்டிருக்கிறது.

மது உற்பத்தியாளரின் எண்ணிக்கையை நிச்சயிப்பது என்பதும் ஒரு திட்டமாகும்.

இப்போது பிரான்சில் மக்கள் குடிக்கும் சாராயத்தில் பாதி, கள்ளத்தனமாகத் தயாரிக்கப்படுகிறது.

மதுவகைகள் பற்றிய விளம்பரங்களைக் கட்டுப்படுத்துவதென்பதும் ஒன்ருகும்.

இவை போன்ற திட்டங்களை நிறைவேற்றும் பிரெஞ்சுப் பிரதமருக்கு சூழ்நிலை சுலபமாக இருக்கும் என்று கூற இயலாது.

பாரிஸ் நகரில், 500-க்கு மேற்பட்ட மதுக்கடைக்காரர்கள், இது போன்ற திட்டங்கள் நிறைவேற்றுவதை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிருர்கள்.

# பக்ரா திட்டத்தில் பணியாற்றும் அமெரிக்கர் பலர் நிபுணர்களல்லர்!

## இந்தியா-பர்மா எஞ்சினீயர்கள் கழகக் கருத்து

**சந்தர்ப்பம் நேர்ந்தால் நாச வேலை செய்வர் என எச்சரிக்கை**

'இப்போது பக்ரா அணைத் திட்டத்தில் பணியாற்றும் அமெரிக்க எஞ்சினீயர்களில் 90 சத வீதத்தினர் எஞ்சினீயர்களே அல்ல,'

என்று, இந்தியா—பர்மா சிவில் எஞ்சினீயர்கள் கழகம் அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது.

பக்ரா நங்கல் அணைத் திட்டம் பற்றிய தனது கருத்தை, அறிக்கை ஒன்றின் மூலம் இந்தியா—பர்மா சிவில் எஞ்சினீயர்கள் கழகம் பஞ்சாப் பிரதமருக்குக் கொடுத்திருக்கிறது.

"நாட்டு மக்களின் நலனைப் பாதிக்கும் வகையில் பக்ரா அணைத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள சேதத்தைப் பற்றி அந்த அறிக்கை கண்டித்துள்ளது.

"இந்திய சர்வீசைச் சேர்ந்த எஞ்சினீயர்கள், இப்பிரச்சினையில் தங்களுக்குள்ள உணர்ச்சிகளை எடுத்துக் கூருமல் இருக்க இயலவில்லை," என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

"இத்திட்டத்தின் வேலைகள் தேவையற்ற முறையில் தாமதப்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள அனுமதிக்காது இந்திய நிபுணர்கள் தடுக்கப்பட்டு விட்டார்கள். இத்திட்டத்தில் பங்கெடுத்துக் கொள்வதன் மூலம், இந்திய நிபுணர்கள், நாட்டிற்குப் பெரிதும் பயனளிக்கும் திட்டங்களின் சேவையில், நல்ல அனுபவத்தை அடைவதிலிருந்து அவர்கள் தடுக்கப்பட்டிருக்கிருர்கள்.

"இவ்வாறு ஒதுக்கித் தள்ளக் கூடியதான வெளிநாட்டுக்காரரின் உதவியை அதிகம் நம்பியிருப்பதும், வெளிநாட்டுக்காரர்களுக்கு உள்ள ஆதிக்கமும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்; இல்லையேல், உலகில் விரும்பத்தகாத சூழ்நிலைகள் ஏற்படும் போது, இந்த வெளிநாட்டு நிபுணர்கள், தங்கள் ஆதரவை நிறுத்தி விடுவார்கள் என்பது மட்டுமல்ல — இத்திட்டங்களையே அவர்கள் அழித்து நாசப்படுத்துவார்கள் எனலாம். அந்த நிலை ஏற்படும்போது நாடு குழப்பத்தில் ஆழ்ந்துவிடும்,"

என்று, அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

அது தொடர்ந்து தெரிவிப்பதாவது:—

"1945-ம் ஆண்டிலிருந்தே சில ஐரோப்பிய எஞ்சினீயர்கள், பக்ரா அணைத் திட்டம் கட்டுவதற்கான காரியங்களுக்கு ஆவன செய்யுமாறு வெளிநாட்டுக் கம்பெனி ஒன்றைத் தவருன முறையில் நெருங்கினுர்கள். இந்திய எஞ்சினீயர்கள், தாங்களே அத்திட்டத்தை நிறைவேற்ற முடியுமென்றும், ஐந்தாறு வெளிநாட்டு ஆலோசகர்கள் மட்டுமே தேவைப்படுவார்கள் என்றும் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தனர்.

பிரிக்கப்படாத பஞ்சாபின் தலைமை எஞ்சினீயர், வெளிநாட்டு நிலையம் ஒன்றின் பெயரை சிபாரிசு செய்தார்; ஆனுல், அப்போது பிரதமராக இருந்த மாலிக் கிசார் ஹையத்கான், அந்த யோசனையை நிராகரித்து விட்டார்.

"இதன் விளைவாக, உலகிலேயே மிகப் பெரியதும், 50 அடி விட்டமுள்ளதும், மிகவும் கடினமானதுமான உட்குழாய்கள் வெளிநாட்டாரின் உதவியின்றி மிகவும் திருப்திகரமாக இந்தியர்களால் கட்டி முடிக்கப்பட்டது.

இப்போது பக்ரா அணையைக் கட்டும் பொறுப்பை ஏற்றுள்ள எஞ்சினீயர்களின் அமைப்பு, பஞ்சாபில் உள்ள இந்திய நிபுணர்களின் பிரதிநிதித்துவத்தோடு கூடியதல்ல; பொறுப்பு அளிக்கப்பட்டால், நமது நிபுணர்கள் சரியான முறையில் பணியாற்றுவார்கள்.

இப்போதுள்ள அமெரிக்க நிபுணர்களில் 90 சதவீதத்தினர் எஞ்சினீயர்களே அல்ல என்பது வருந்தத்தக்கது.

இவர்களுக்குப் பதிலாக நமது நாட்டவரை குறைந்த செலவில் நியமிக்கலாம்.

இத்திட்டத்தில் காணப்படும் தாமதம் திகைப்பூட்டுவதாக இருக்கிறது. பஞ்சாப் நீர்ப்பாசன இலாகாவிடம் ஒப்படைத்தால், நல்ல முறையில், இந்த வேலையை நான்காண்டுகளில் நிறைவேற்ற முடியும்."

# முகாஜித்கள் மீது பர்மியத் துருப்புகள் நர வேட்டை!

### தனி நாடு கோருவோர் மீது தாக்குதல்!

வடக்கு அரக்கானில் உள்ள முகாஜித்களின் தலைமைக் காரியாலயத்தை, பர்மியத் துருப்புகள் தாக்கி அழித்ததுடன், முகாஜித்களை துரத்தித் தாக்கினுர்கள் என்றும் தெரிகிறது.

முகாஜித்களின் இரண்டு தள்பதிகள் கொல்லப்பட்டதாகவும், அவர்களுக்குச் சொந்தமான ஒரு வெடிமருந்து கிடங்குச் சாலை கைப்பற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

முகாஜித்கள், அரக்கானில், தனி முஸ்லிம் நாடு ஒன்றைக் கோருகின்றனர்.

அவர்கள் அடிக்கடி பர்மிய நகரங்களை கொள்ளையிடுகிருர்களாம்.

அண்மையில் மாங்டாவ், புத்திடாங் போன்ற நகர மக்கள், தங்களை முகாஜித்களிடமிருந்து காப்பாற்றுமாறு பர்மிய சர்க்காரைக் கோரினுர்கள் என்று தெரிகிறது.

இந்த கிளர்ச்சிக்காரர்களின் தலைவரான காசிம் என்பவர், கிழக்கு பாகிஸ்தானில், சிறிது காலத்திற்கு முன்னர் கைது செய்யப்பட்டிருக்கிருர்.

இத்திங்கள் முதல் நாளன்று, இவர்கள்மீது பர்மியத் துருப்புகள் தாக்குதல் நடத்தியபோது, இவர்கள், சிறந்த பாதுகாப்பு நிலையங்களில் இருந்ததாகவும், மாங்டாவ் நகரில் இவர்கள் ஏராளமான உணவுப் பொருள்களைச் சேமித்துவைத்திருந்தார்களென்றும் கூறப்படுகிறது.

# உற்பத்தி பெருக்கினுல்தான் பங்கு போட முடியும் என்ற பழைய பல்லவி

## முதலாளிகள் இலாபக் கொள்ளை பற்றி 'கப்சிப்'!

*வேலை நிறுத்தம் கூடாது என தொழிலாளருக்கு பண்டித நேருவின் இதோபதேசம்*

" இயந்திரப் புரட்சியின் காலந்தொட்டு தொழிலாளர்களின் பிரச்சினைகள் பற்றிய பழைய சரித்திரங்களைப் புரட்டினுல், அக்காலத்திய தொழிலாளர்கள், எவ்வளவு கஷ்டங்களையும் தொல்லைகளையும் கடந்து வந்தார்கள் என்பது நன்ருகப் புலனுகும். தொழிலாளியின் குருதியை உறிஞ்சிக் குடித்து, தொழிலாளர்கள் ஏற்படுத்திய சங்கங்களைத் தடையும் செய்த காலமும் உண்டு; அக்காலத்திலெல்லாம் தொழிலாளிகள் தாங்கள் இரகசியமாகவே கூடி தங்கள் சங்கங்களை ஏற்படுத்திக்கொண்டனர்; அப்படி அவர்கள் சங்கங்களை ஏற்படுத்தக் கூட்டம் கூடியபோது, அவர்களெல்லாரும் நாடு கடத்தப்பட்டதுண்டு; துன்புறுத்தப்பட்டதுமுண்டு. ஆனுல், இப்போது அந்த நிலைகள் மாறிவிட்டன. அவைகள் எல்லாம் இப்போது பழங் கதைகள். தொழிலாளிகள், தங்கள் தொழிற் சங்கங்கள், வேலை நிறுத்தங்கள் ஆகிய ஆயுதங்களின் மூலம் தங்கள் சக்தியின் மாண்பு இத்தகையது என்பதைக் கண்டறிந்து கோண்டனர். இப்போது, தொழிலாளருடன் வேலை நிறுத்தங்கள் பற்றி விவாதிக்கையில் கடந்த ஒரு நூற்ருண்டு சரித்திரத்தையும், நிலையையும், அவர்கள் அடைந்த இன்னல்களையும் நாம் மனதில் வைத்துக் கோள்ள வேண்டும்.

" இப்போது, தொழில் பற்றிய தகராறுகளைத் தீர்க்க, சர்க்கார் சட்டங்கள் பல செய்துள்ளது—இன்னமும் பல சட்டங்கள் இயற்ற முடியும்; என்ருலும், சட்டங்களுக்கு ஓரளவு பலம்தான் உண்டு.

" யுத்தங்களினுல், பிரச்சினைகள் ஏதும் தீர்ந்துவிடாததைப் போன்றே தொழில் துறையிலும், ஆலைக் கதவடைப்புகளாலும், வேலை நிறுத்தங்களாலும் எந்தவித பிரச்சினைகளும் தீர்ந்துவிடப் போவதில்லை."

*—இவ்வாறு, புதுடில்லியில் நடைபெற்ற மாநில தொழிலாளர் நல அமைச்சர்களின் 11-வது மாநாட்டை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில், பிரதமர் நேரு பண்டிதர் கூறினுர்.*

மாநாட்டுக்கு, மத்திய சர்க்கார் தொழிலமைச்சர் கந்துபாய் தேசாய் தலைமை தாங்கினுர். நேரு தொடர்ந்து பேசியதாவது:—

" தொழிலாளிகளும் முதலாளிகளும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வதாலேயே தங்கள் தங்கள் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் கண்டுபிடித்துவிட முடியாதென்பதை உணர்ந்துகொள்ளவேண்டும். பிரச்சினைகளை நியாயமான முறையில் தீர்த்துக் கொள்வதற்காக நம்பிக்கையான சூழ்நிலைகளை அவர்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

" இதுவரையில், முதலாளி அல்லது தொழிலாளி என்ற கண்ணேட்டத்திலேயே அவர்கள் பிரச்சினையை நாம் பரிசீலித்து வந்திருப்பதால்தான்; பிரச்சினைகளைப் பைசல் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டும், பிரச்சினைகள் எதுவும் தீர்க்கப்படாமல் அப்படியே இருக்கின்றன; ஆகவே, இவ்விஷயத்தில் மாறுதலைச் செய்ய வேண்டும்; அந்த மாறுதல்களையும் நிதானித்துச் செய்ய வேண்டும்.

" இந்தியா ஏழை நாடு; செல்வம் குறைந்த நாடு; அதனுல்தான் இவ்வித சச்சரவுகள் எழுகின்றன. எனவே, செல்வத்தைப் பங்கிடுவதற்கான பூசல்களைத் தீர்க்க முற்படுமுன், மேலும் செல்வத்தை உற்பத்தி செய்ய முயலவேண்டும்; ஏனெனில், செல்வம் கையில் இருந்தால்தான் அதைப் பங்கிட முடியும். எனவே, நமது நாட்டின் முன் நிற்கும் முக்கிய பிரச்சினை, செல்வத்தைப் பெருக்குவதெப்படி? பொருள் உற்பத்தியைப் பெருக்குவதெப்படி? என்பதேயாகும்.

" ஒரு நாட்டின் செல்வமும் உற்பத்தியும் அதிகரித்தால்தான் அந்த நாட்டின் வாழ்க்கைத்தரமும் உயர்ந்து, நாட்டு மக்களின் பொது நிலைமையும் அபிவிருத்தியடையும்."

★

## மாறுதல் வேண்டும்!

" இப்போதைய சர்க்கார், கட்டளை பிறப்பிக்கும் முறை எனக்குப் பிடிக்கவில்லை; பழைய முறை உத்திரவுகள், இனிமேல் பொருந்தாது; நாம், நமக்குள்ளேயே நம்பிக்கையை உருவாக்கிக்கொண்டு, செய்ய வேண்டியவற்றை மக்களுக்குப் புரியும்படி சொல்ல வேண்டும்,"

என்று, பண்டிதநேரு, சர்க்காரின் சட்டங்களையும் முறைகளைக் கண்டித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

## கன்னடப் பகுதி திராவிட முன்னேற்றக் கழக மாநாடு

**டிசம்பர் 18, 19 தேதிகளில் பெங்களூரில் நடைபெறும்**

" கன்னடப் பகுதி திராவிட முன்னேற்றக் கழக முதல் சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகளை, பெங்களூர் நகரில், டிசம்பர் 18, 19-ந் தேதிகளில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டு, வரவேற்புக் குழுவும் அமைக்கப்பட்டுவிட்டது;

"மாநாடு சிறப்பாக நடைபெறுவதற்கான எல்லா வேலைகளும் வெகு துரிதமாக நடைபெற்று வருகின்றன;

" மாநாட்டில் கலந்துகொள்ள தி. மு. கழக முன்னணி வீரர்கள் எல்லாரும் அழைக்கப்பட்டிருக்கின்றனர்;

" மாநாடு நடைபெறும் இடம், மாநாட்டுத் தலைவர், திறப்பாளர் பற்றிய விபரங்கள் எல்லாம் அடுத்த அறிக்கையில் தரப்படும்,"

என்று, வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் எஸ். ஜே. உசேன் அறிவிக்கிருர்.

### திருக்குறள் வகுப்பு

15-11-54 மாலை 6½ மணிக்கு, சென்னை, புரசை, வெள்ளாளத் தெரு (எண் 100), 'தொண்டை மண்டல வேளாளர் கழகத்தில்,' பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் திருக்குறள் வகுப்பைத் துவக்கி வைப்பார்.

* * *

14-11-54 காலை 10 மணிக்கு மண்ணடி புதுத்தெரு 94—95 இராசமன்னர் பாடசாலையில் முத்தியாலுப்பேட்டை திருவள்ளுவர் இளைஞர் கழகச் சார்பில், திருக்குறள் வகுப்பு நடைபெறும். கி.முருகேசனுர் பேசுவார்.

# ஆசிரியரை கவுன்சிலர் உமாபதி அடித்த வழக்கு

## உயர்நீதிமன்றத்தில் தண்டனை உறுதி

*அபராதத் தொகை மட்டும் ரூ. 10 ஆயிற்று!*

சென்னை உயர்நீதி மன்றத்தில், நீதிபதி சோமசுந்திரம் அவர்கள், சென்னை நகரசபை உறுப்பினரான ஜி. உமாபதி, நகரசபைப் பள்ளி ஆசிரியர் ஒருவரை அடித்ததாக இந்தியன் பினல் கோட் 352-வது பிரிவின்படி குற்றம் சாட்டப்பட்ட வழக்கொன்றில் முதல் மாகாண மாஜிஸ்திரேட் அவர்கள் உமாபதிக்கு அளித்த தண்டனையை உறுதிப்படுத்தி தீர்ப்புக் கூறினுர்.

மேலும் நீதிபதி அவர்கள் மாஜிஸ்திரேட்டளித்திருந்த அபராதத் தொகையான ரூ. 201 - ஐ, ரூ. 10 - ஆகக் குறைத்துத் தீர்ப்பளித்தார்.

1953-ம் ஆண்டு செப்டம்பர் 16-ம் நாள் அன்று சென்னை நகரசபை ஆசிரியரான சூர்யநாராயண ராவ் என்பவரை ஜி. உமாபதி தாக்கியதாக வழக்கு.

இந்த வழக்கில் முதல் மாகாண மாஜிஸ்திரேட் உமாபதிக்கு ரூ. 201 தண்டனை விதித்தார்.

உமாபதியின் வீட்டின் எதிரே குடியிருக்கும் பையன் ஒருவனை அந்தப் பள்ளி ஆசிரியர் அடித்த முறை பற்றி உமாபதி ஆட்சேபித்து; அந்த ஆசிரியரைத் தாக்கினுர் என்று சொல்லப்படுகிறது.

மாஜிஸ்திரேட்டின் தீர்ப்பை எதிர்த்து, உயர்நீதி மன்றத்தில் உமாபதியின் சார்பில் அப்பீல் தாக்கல் செய்யப்பட்டது.

உமாபதியின் சார்பில், வழக்கறிஞர் வி. எல். எதிராஜ் வாதாடினுர்.

## பஞ்சாப் பி.-சோ. கட்சி தலைவர் கைது

*சட்ட விரோதமாகப் பேசினுராம்*

அம்பாலா மாவட்ட பிரஜா-சோஷலிஸ்டு கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் கிருஷ்ணன் என்பவர், சாந்திகரில், இராஜ்யப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டிருக்கிருர்.

ஹிசார் மாவட்டத்தில் அவர் சட்ட விரோதமான முறையில் பேசியதற்காகக் கைது செய்யப்பட்டார்.

ஹிசார் மாவட்ட நீதிபதி பிறப்பித்த வாரண்டின் மீதே அவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிகிறது.

## இராதா இராமாயண...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர் இப்போது சென்னையில் இருக்கிருர்.

இந்த மறியலை நடத்துவதற்காகவும், பெரியார் ஈ. வெ. ராமசாமியின் இராமாயண, இந்து கடவுள் எதிர்ப்புப் பிரச்சாரத்திற்கு மறுப்புப் பிரச்சாரம் செய்யவும், திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த நாஸ்திக ஒழிப்பு குழுவினர் 'தொண்டர்'களைச் சேர்க்க முடிவு செய்திருக்கின்றனராம்!

## கோபி தாலுக்கா விவசாயிகள் மாநாடு

★

**15—11—54** காலை 9 மணி முதல், நாகையா தியேட்டரில் மேற்படி மாநாடு, தி.மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணுதுரை தலைமையில் நடைபெறும்.

தோழர் டி. செங்கல்வராயன் மாநாட்டை ஆரம்பித்து வைப்பார்.

தோழர் கே. ஆர். இராமசாமி 'விவசாயிகள்' கோடியை ஏற்றி வைப்பார்.

தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், அ. பொன்னம்பலனுர், கே. ஆர். நல்லசிவம், எம்.எல்.ஏ., ஜி. எஸ். லக்ஷ்மணன், பி. எஸ். நல்லாக் கவுண்டர், எம்.எல்.ஏ., பி. ஜி. கருத்திருமன், எம்.எல்,ஏ., பி. கே. முத்துவேலப்ப கவுண்டர், எஸ். கே. நடராஜ கவுண்டர் (சத்தி) மற்றும் பலர் பேசுவர்.

## உடுமலை வட்டத்தில் கே. ஏ. மதியழகன்

31—10—54ல், கொமாரலிங்கம் கூட்டத்தில் திராவிட நாடு பிரிவினை குறித்துப் பேசினுர்.

3—11—54ல், வாளவாடியில், கல்லக்குடி போராட்ட வெற்றி விழாக் கூட்டத்தில் உரையாற்றினுர்.

5—11—54ல், உடுமலையில் நடந்த நாடகத்தில் தலைமையுரை நிகழ்த்தினுர்.

### அழகிரி நூலக திறப்பு விழா

14—11—54 காலை 9 மணிக்கு சென்னை, கோகலே மண்டபத்தில் அழகிரி நூலக திறப்பு விழா தோழியர் அலமேலு அப்பாதுரை தலைமையில் நடைபெறும். தோழர் கண்ணதாசன் மேற்படி நூல் நிலையத்தைத் திறந்துவைப்பார். தோழர்கள் திருக்குறள் வி. முனுசாமி, எம்.பி., நாஞ்சில் கி. மனேகரன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். நன்கொடை அணு 4.

### பணிமனைத் திறப்பு விழா

14—11—54 காலை 9 மணிக்கு சென்னை, மயிலை, எண் 2, அரங்கநாதபுரம் தெருவில் (முண்டகண்ணியம்மன் கோயில் அருகில்) சென்னை 44-வது வட்ட தி. மு. கழகப் பணிமனைத் திறப்பு விழா தோழர் பி. எம். மதியழகன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், கோ. இளவரசு ஆகியோர் பேசுவர்.

### புதுமனை புகு விழா

14-11-54 மாலை 5½ மணிக்கு, சென்னை, செம்பியம் பேப்பர் மில்ஸ் ரோட், நகரசபை பருத்துவச்சாலை மைதானத்தில், திரு.ஜே. சிவசண்முகம் அவர்கள் காந்திஜி ஞாபகார்த்த நிலையத்தைத் துவக்கி வைத்துக் கொடியேற்றுவார். சென்னை மேயர் ஆர். முனுசாமி பிள்ளை அவர்களால் மேற்படி மைதானத்தின் ஒரு பகுதி, நிலையத்திற்காக அளிக்கப்படும். பிரமுகர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

### பாராட்டு விழா

14—11—54 மாலை 5 மணிக்கு பெரம்பூர் கலவலகண்ணன் செட்டியார் உயர்நிலைப் பள்ளிக்கு எதிரில், 30—10—54-ல் விதவைத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகள் தோழர் சி. அரங்கசாமி—தோழியர் பெ. ர. மீனுட்சி அவர்களைப் பாராட்டி ஓர் பாராட்டு விழா நடைபெறும். நாரண துரைக்கண்ணன் தலைமையில், அவர்களைப் பாராட்டி தோழர்கள் ப. ஜீவானந்தம் எம்.எல்.ஏ., அன்புகணபதி, சாமுண்டீஸ்வரன், தா. வே. முருகேசனுர், தோழியர் அலமேலு-அப்பாதுரை ஆகியோர் பேசுவர்.

## கழகக் கூட்டம்

திருப்பத்தூர் (வ. ஆ.)
**14-11-54** மாலை 6-மணிக்கு
இடம்: சந்தைப்பேட்டை மைதானம்
*தலைவர்:*
ஏ. இ. நாச்சியப்பா பி.ஏ.,பி.எல்.
*பேசுவோர்:*
முகவை ஆர்.எஸ். பாண்டியன்
நெடுஞ்சோழன்

### சென்னை 26-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

14—11—54 மாலை 5 மணிக்கு சென்னை 26-வது வட்ட (பெரியமெட்டு கிளை) தி. மு. கழக மனையில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது வரவு-செலவு கணக்கு சரிபார்த்தல், தோழர் அ. குப்புசாமிக்கு பாராட்டு தெரிவித்தல், புதிய செயலாளர் தேர்தலை நடத்த ஆலோசித்தல் ஆகியவை பற்றி தீர்மானிக்கப்படும்.

### சென்னை 25-வது வட்ட தி.மு. கழக உறுப்பினர்கட்கு

14—11—54 மாலை 4 மணிக்கு சென்னை, புரசை, பெருமாள் நாய்க்கன் தெரு, 18-ம் எண்ணுள்ள இல்லத்தில், சென்னை 25-வது வட்ட தி. மு. கழக (கிளை) பொதுக் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது கழகப் பணியாளர்கள் தேர்தல், கழக எதிர்கால நடிவடிக்கைகள் பற்றி தீர்மானிக்கப்படும்.

### சென்னை 43-வது வட்ட தி.மு. கழக உறுப்பினர்கட்கு

14—11—54 காலை 8 மணிக்கு சென்னை 43-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது சென்ற மாதம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் வரவு-செலவு கணக்கும், கழகத்தின் வரவு-செலவு கணக்கும் பரிசீலிக்கப்படும்.

### சென்னை முத்தமிழ் மன்ற உறுப்பினர்கட்கு

14—11—54 காலை 10-மணிக்கு எண் 17, சாலைவிநயகர் கோவில் தெரு, முத்தமிழ் மன்றத்தில், பொதுக் குழுக் கூட்டம் நடைபெறும்.

### சென்னை மாநில மீனவர் ஐக்கிய முன்னணி

14-11-54 காலை 9½ மணிக்கு காசிபுரம் 'ஏ பிளாக்' மீன் பிடிப்போர் சங்கத்தில் உறுப்பினர்கள் கூட்டம் தோழர் கே. குப்புராஜ் அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது, டில்லி சென்று திரும்பும் தலைவர் என். ஜீவரத்தினம் அவர்களுக்கு வரவேற்பு அளிக்க ஆவன செய்யவும், மாநாட்டின் தீர்மானங்களின் பேரில் நடவடிக்கை எடுக்கும் விஷயம் பற்றியும் ஆலோசிக்கப்படும்.

### திரு. வி. க. நினைவு பேச்சுப் போட்டி

14-11-54 பிற்பகல் 2-மணிக்கு சென்னை, டாக்டர் குருசாமி முதலியார் டி. டி. வி. உயர்நிலைப் பள்ளியில், மாணவர் மன்றச் சார்பில், திரு. வி. க. அவர்கள் நினைவாகக் கல்லூரி வகுப்புகளுக்கான பேச்சுப் போட்டிகள் நடைபெறும்.

### சொற் பயிற்சிக் கூட்டம்

14—11—54 காலை 9½ மணிக்கு சென்னை 14-வது வட்டம் அழகிரி மன்றத்தில் தோழர் க. அ. இரகுநாதன் தலைமையில் 'அரசியலும் நாமும்' என்ற பொருள் பற்றி நடைபெறும் சொற் பயிற்சிக் கூட்டத்தில் தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணுதுரை, எம். ஏ